REGD No M 4642

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 4-11-51 | இதழ் 19.

★ சும்மாயிருப்பதரிது! ★

[தில்லை-வில்லாளன்]

போன மச்சான் திரும்பி
வந்தான் பூ மணத்தோடே

அவள் பாடினள்! லோகம் இப் ப் பாடுவதைக் கேட்ட, அடுத்த ட்டு யோகம் கேலி செய்தாள்.

"எங்கே போன மச்சான்?" என் ள் யோகம், சிரித்தபடி.

"சீமைக்குப் போன மச்சான்?" லாகம், மகிழ்ச்சியோடு.

யோகம் சிரித் ள்!சிரிக்காமல் ன்ன செய் ள்? லோகத் ன் அறியாமை பக்கண்டு சிரிக் த்தான் முடி ம்சிறிப் பயன் ன? ஆகவே த்தாள்.

லோகத்தின் ச்சான்' சிங்கா ம், சீமைக்குப் போகவில்லை! னல், அவளுக்கு அப்படிச் சால்லி வைத்திருந்தான். அவன் லோனுக்குப் போயிருந்தான். ங்கு சீமானக இருந்துவிட்டு, ரும்பி வந்துவிடவில்லை! தேயிலைக் ட்டு, சிறு கூலியாக வேலைசெய்து டுத் திரும்பி வந்திருக்கிறன். ப்பொழுது, கதம்பம் பத்து ம் வாங்கிக்கொண்டு வந்தானே தவிர, சிலோனில், பிரிவுபசார பத்திரம் படித்துக்கொடுத்து, ரோஜா மாலை போட்டு அனுப்பவில்லை! வருகிறபொழுது கூட, மேஸ்திரி மிரட்டினன்! போகிற இடத்திலும், உன் உழைப்பினல்தான் பிழைக்க வேண்டும். அதனல் சிங்கார சிலோனுக்கு நன்மை வர வேண்டும் என்று தட்டிக்கொடுத்தான்! அந்த சிங்காரம் பூமணத்தோடு திரும்பி வந்தான், என்று பூரிப்போடு பாடுகிறாள், லோகம். அவன் சீழிந்து வந்தது, யோகத்திற்குத் தெரியும். அதனல்தான், அந்தப் பாட்டைக் கேட்டதும், அவள் கேலி செய்தாள்.

இப்பொழுது அவன் திரும்பி வந்தது இரண்டாவது தடவை! முதல் தடவையிலாவது, ரங்கூன் ரப்பர் தோட்டத்தில் பத்துப் பேருக்கு மேஸ்திரியாக இருந்து திரும்பி வந்தான். இப்பொழுதோ, இலங்கை தேயிலைக் காட்டிற்கு ஓடி, சிறு கூலியாக இருந்தான்!

பத்துப் பேருக்கு மேஸ்திரியாக இருந்த கௌரவத்தோடாவது, வெளிநாடு செல்லும் நோக்கத்தை விட்டிருக்க வேண்டும்! அதைவிட மட்டமாக, சாதாரணக்கூலியாகவும் இருந்துவிட்டு, திரும்பி வந்திருக்கிறன் சிங்காரம்.

அந்த சிங்காரத்தை பெண்ணியே, லோகம் பாடினள். விஷயந் தெரிந்த யோகம்கிண்டல் செய்தாள்.

* * *

சிங்காரம் திரும்பிவந்தான் தேயிலைக் காட்டிலிருந்து! அதுபோலத்தான், அன்பர் ஆச்சாரியாரும் திரும்பி வந்திருக்கிறார், டெல்லியிலிருந்து!

ஆம், அவர் சிங்காரம் போலவே, இரண்டுமுறை திரும்பி வந்திருக்கிறார்! முன்னர் கவர்னர் ஜெனராலாக இருந்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறார், ஒரு முறை! பிறகோ, டெல்லி அழைக்கிறது என்றவுடன், தான் முன்னர் வகித்த பதவி

மதுரையில்
பொதுக்குழு கூடுகிறது

நவம்பர் 17, 18, சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களில் மதுரையில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு கூட்டம் நடைபெற இருக்கிறது. அதில் தி. மு. கழக சட்ட திட்டங்கள், சென்னையில் நடக்கவிருக்கும் மாநில மாநாடு, பொதுத் தேர்தல் பற்றி பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து பேசுவர்.

யென்ன, இப்பொழுது அளிக்கப் படுவது என்ன என்பதைக் கூட சிந்திக்காமல், ஓடினார்!, அவர், வடநாட்டாதிக்கம் ஆரம்பத்தில் அழைத்தபொழுது, மேற்கு வங்காள கவர்னரானார்! பிறகு நெருக்கடியான நேரத்தில், கவர்னர் ஜெனரலாகவும் ஆக்கப்பட்டார்! அதை விடுத்து, திரும்பி வந்தார்! அத்தோடு நின்றிருந்தால், அவர் பெருமை நிலைத்திருக்கும்! ஆனால் அடுத்த தடவையும் போனார்! மந்திரியென்றனர் முதலில்! சரியென்று ஏற்றுக் கொண்டார்! இலாக்காவே கிடையாது என்றனர். அதனால் பரவாயில்லை யென்றார். பிறகு, பட்டேல் மறைந்தவுடன், இவரைத் துணைப் பிரதமராக்கவில்லை. பட்டேல் வகித்த ஒரு இலாக்காவை மட்டுமே கொடுத்தனர். அதனையும் சகித்துக் கொண்டார்!

கவர்னர் ஜெனராலாக இருந்து விட்டு; இலாக்கா இல்லாத மந்திரியாகவும் இருந்தார்!

மேஸ்திரியாக இருந்த சிங்காரம், சிறு கூலியாக இருந்தானே, அது போலத்தான், ஆச்சாரியாரின் அந்திய கால அரசியல் வாழ்வும் அமைந்துவிட்டது!

சிங்காரம், கூலியாக இருந்தது மட்டுமல்ல, அந்நாட்டில் அனுபவித்த கொடுமைகள் அநேகம்! தமிழ் நாட்டிலிருந்து சென்றதாலேயே, பல சிறுமைகளை, சீரழிவுகளைத் தாங்கிக்கொள்ளவேண்டியவனாக இருந்தான். சட்டத்தினாலும், சமூகக் கட்டு திட்டத்தினாலும், சிங்காரத்தை சிலோன் சித்திரவதை செய்தது! அந்தக் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் தான் சிங்காரம் திரும்பி வந்தான்.

அவன் பூமணத்தோடு திரும்பி வந்தான் எனக் குதூகலித்தாள், அவன் மனைவி லோகம்.

அன்பர் ஆச்சாரியார் நிலையை மட்டும், வேறாகச் சொல்ல முடியாது. தென்னாடு, என்றாலேயே வடநாட்டிலே வளர்ந்துவரும் வேற்றுமையை நேரில் அறிந்தவர் அவர். அதன் கொடுமைகளை அடிக்கடி தாங்கியவர் அவர். அதுவும், அவர், பொதுத் தேர்தல் நெருங்குகிற நேரத்தில், திரும்பி வந்துவிட்டார்!

பூமணத்தோடு அவர் திரும்பினார் என்று, பூசி மெழுகலாம், அவர் புகழ் பாடுவோர். ஆனால் அவர் வந்திருப்பது பூமணத்தோடல்ல என்பது, அவரை நெருங்கியவர்களுக்குத் தெரியாமல் போகாது.

டெல்லியிலிருந்து சென்னையில் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள அனுப்பிய விண்ணப்பத்தைக் கண்டபொழுது, தீவிர சிந்தனையாளர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அன்பர், ஆச்சாரியாரின் அரசியல் திருவுலா. இனி டெல்லி பக்கம் நடக்குமா என்பதை உணர்ந்து கொண்டிருக்கவேண்டும்.

சிங்காரம், எங்கேயும் திரும்பிப் போகவில்லை. லோகத்தோடு, ஒரு 'கடையை கன்னியை' வைத்துக் கொண்டு, காதுங் காதும் வைத்த மாதிரி, குடும்பம் நடத்தத்திட்டமிட்டு விட்டான்.

ஆச்சாரியாரின் அரசியல் வாழ்வும் அப்படித்தான் முடியுமோ என்னவோ, நாம் அறியோம்!

ஆனால், போன ஆச்சாரியார் திரும்பிவந்தார் பூமணத்தோடே, என்று புளங்காகிதமடையும் தோழர்களுக்கு போவதற்கு முன்னும்பின்னும் புதைந்த செய்திகளையும் கவனப்படுத்திக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்கிறோம்.

யோகம், சிங்காரத்தின் கதை முழுவதும் தெரிந்தவளாதலால், லோகம் பூரிப்போடு பாடியபொழுது சிரித்தாள். அன்பர் ஆச்சாரியாரின் வடநாடு வாழ்வு முழுவதும் நாம் அறிந்துள்ளதால், சிரிக்கிறோம்.

* * *

திரும்பி வந்த ஆச்சாரியாருக்கு டெல்லியில் நடந்த பாராட்டு விழாவில், சிங்காரத்தைத் தட்டிக் கொடுத்த தோட்டத்து மேஸ்திரி போல நேரு பேசியிருக்கிறார். சிங்காரம் சாதாரணமானவன். மேஸ்திரி சொன்னதைக் கேட்டான். பதில் சொல்லவில்லை. திரும்பிவந்துவிட்டான்! அன்பர் ஆச்சாரியார் கூரிய மூளை படைத்தவராயிற்றே! அவ்வா விடுவார்? தன் உள்ளத்தை ஓரளவு திறந்து காட்டிவிட்டார், அவர்!

நேரு, ஆச்சாரியாரின் கூரியமூளையைப்பாராட்டினார்! அவரது நீண்ட அரசியல் அனுபவத்தையும், ஆளும் திறத்தையும் புகழ்ந்தார்! கூரியமூளை, தேர்ந்த அனுபவம், முற்றிய அரசியல் ஆற்றல் இவை நமக்குத் தேவையென்று கூறி, 'ஆச்சாரியார் அரிய யோசனைகளால் நானே பலனடைந்திருக்கிறேன்' என்று, அவரின் அறிவுத்திறத்தைச் சிறப்பித்தார்!

ஆச்சாரியார் அந்தப் பாராட்டு விழாவிலேயே, தம் கூரிய மூளையைக்காட்டிவிட்டார்.

இனி என் கூரிய மூளை உங்களுக்கு உதவாது. பிரார்த்தனைதான் உங்களுக்கு உதவி செய்யும்.

டெல்லியிலே வீற்றிருப்பவருக்காக, அவரது கூரிய மூளை இனி வேலை செய்யாது! அவருடைய பிரார்த்தனையால்தான் டெல்லிக்கு உதவி செய்வார், என்று தெரிவித்துவிட்டார்.

நேரு வேண்டினார், ஆச்சாரியார் புத்தி கூர்மை தனது ஆட்சிக்குப் பயன்படவேண்டுமென்று! ஆனால், ஆச்சாரியார் கூறிவிட்டார் அது முடியாதென்று!

நேரு, அவரது அறிவைப் புகழ்ந்தார்! பாராட்டினார்! அதன் உதவி வேண்டுமென்று கெஞ்சும் குரலில் கேட்டார்! முடியாது, என்று மறுத்துவிட்டார் ஆச்சாரியார்.

நேரு சாதாரணமாகக் கேட்கவில்லை அவரது கூரிய மூளையின் சீரும் சிறப்பையும் பாராட்டிய பிறகு கேட்டிருக்கிறார். அதனால் பலமுறை பலனடைந்திருக்கிறேன் எனப் பகிரங்கமாக வெளியிட்ட பிறகு கேட்டிருக்கிறார். டெல்லியில் வாழ்பவன், நாட்டின் பிரதமர் என்ற இரண்டு வகையிலும், அவர் பிரிவை என்னால் சகிக்க முடியவில்லையென பரிதாபத்தோடு கேட்டிருக்கிறார். இருந்தும் ஆச்சாரியார் மறுத்து விட்டார்!

பதவியிலிருந்து அவர் போகலாம், ஆனால் பொறுப்பிலிருந்து எப்படி

தி. மு. க. மாநில மாநாடு

அவர் விலகமுடியும், என்று உரிமை பாராட்டிக் கேட்டிருக்கிறார் நேரு. நாட்டின் நெருக்கடியான நேரத்தில் முதிர்ந்த அறிவும், தெளிந்த அனுபவமும் சேர்ந்தளிக்கும் தீர்ப்புகள் தேவை, அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர் உதவுவாரா, என்று ஆர்வத்தோடுகேட்டிருக்கிறார்! ஆச்சாரியாரோ மறுத்துவிட்டார்!

மூளைப்பிச்சை கேட்டார் நேரு! முடியாதெனக் கூறிவிட்டார் ஆச்சாரியார்!!

இதனைக் கூர்ந்து படிப்போருக்குத்தெரியும், ஆச்சாரியார் பூமணத்தோடு திரும்பவில்லை, என்று. அவர் உண்மையில் புண்பட்ட இதயத்துடன் புறப்பட்டு வந்திருக்கிறார்!

* * *

அன்றோர் நாள் இத்தாலிதேசத்திலேயே, ஆச்சர்யத்தை அள்ளிவீசிக்கொண்டிருந்தான் அவன்.

கூரிய மூளை படைத்தோன் என்றே பிராளரன்ஸ் அரசாங்கத்தில் அவன் இடம்பெற்றான்.

அங்கே பதினைந்து ஆண்டுகள், பிராளரன்ஸ் அரசியலில் அவன் புகாத நடவடிக்கை இல்லை.

அவன் பிராளரன்ஸ் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஆண்டுகளில், செய்த காரியங்களைக் கேட்டவர் ஆச்சரியத்தால் மூச்சடைத்துப் போவர்!

பின்னர், அவன் வகித்த பதவியிலிருந்து விலக்கப்பட்ட பிறகும், அவன் சும்மாயில்லை! ஏடுகள்எழுதினான். அவைதரும் நீதிகள்தான் நெஞ்சு நடுக்கந் தரக்கூடியன!

வழி, எவ்வளவு பழியுடையதானாலும் பரவாயில்லை; முடிவு உனக்கு வேண்டியதானால், அதனை விடாதே என்று முதன்முதல் சொல்லிக்கொடுத்த கூரியமூளை படைத்தவன் அவன்!

மக்கள் தேங்கிய குட்டை நீரைப்போல தண்ணீர்தானே உயர எழுந்து ஏதும் செய்துவிட முடியாது, என்று ஆளுங் கூட்டத்திற்கு, மக்களிடம் அலட்சிய மனப்பான்மை வளரச் செய்தவன் அவன்!

தனக்குப்பயன்தராதெனில், தான் கொடுத்தது வாக்குறுதியானாலும், அதனை நிறைவேற்றாமல் இருப்பவனே புத்திசாலி, இப்படிப் புதியதொரு அகராதியைப் புரட்டிக்காட்டினான் அவன்.

ஆட்சிக்கு இலட்சியம் தேவையில்லை வலிமையிருந்தால் போதும், என்றான் அவன்.

பக்கத்து நாட்டிடம் எச்சரிக்கையாயிரு. அதன் பக்கத்து நாட்டுடன் நட்பு பாராட்டு, என்று புத்தி கூறினான், ஆள்வோர்க்கு அவன்!

அவன், தனி மனிதனின் நெறி வேறு! அரசியல் நெறி வேறு! என்று எடுத்துக் காட்டினான்.

அவனைக் கூரிய மூளை படைத்தவன் எனக்கூறினர் அன்று!

அவன் தான், மாக்கியவெல்லி. அந்த மாக்கியவெல்லியை தோற்கடிக்கக் கூடியவர் ஆச்சாரியார் என்பதை நேரு அறிந்து கொண்டு தான், மூளைப் பிச்சை கேட்டார்! ஆச்சாரியார் மறுத்து விட்டார்!

அரசியல் தந்திரத்தில், மாக்கியவெல்லியையும் வெல்லும் திறம் படைத்த ஆச்சாரியார், எங்கே தென்னாடு சென்று ஏதேனும் செய்து விடுவாரோ, என்று நேரு சந்தேகித்திருக்கிறார் என்பது நன்றாகத் தெரிகிறது!

கூரிய மூளைகள் சும்மாயிருப்பதில்லை.

நேரு இப்படிக் குறிப்பிட்டுள்ளார். ஆச்சாரியார் கூரிய மூளை படைத்தவர். ஆகவே அவரும் சும்மாயிருக்கப்போவதில்லையென்பதை நேரு நன்றாக உணர்ந்து விட்டார். ஆகவேதான் அந்த மூளை தனது ஆட்சிக்கு வலுவாக அமையவேண்டும் என்று கேட்டார்! ஆச்சாரியாரோ, மறுத்து விட்டார்!

உங்களுக்காக பிரார்த்தனை செய்கிறேன்! ஆனால், எனது கூரிய மூளை பலம் மட்டும் இனி கிடைக்காது! இப்படி ஆச்சாரியார் கூறுகிறார்.

அப்படியானால், அவரது கூரிய மூளை வேறு ஏதோ காரியத்திற்காக ஒதுக்கப் பட்டிருக்க வேண்டும்! அந்தக் காரியம் என்ன என்பது தான் இன்று பலரின் சிந்தனையைக் கிளப்பும் செய்தி!

அவரது கூரிய மூளை வரண்டுவிட வில்லை! மிகவும் முதிர்ந்து கனிந்திருக்கிறது! அதன் உதவி இனி டெல்லிக்கு இல்லை என்று முடிவாகச் சொல்லி விட்டார்! ஆகவே, அந்த கூரிய மூளையை, சென்னைக்குத்தான் பயன்படுத்தப் போகிறாரா? என்று கேட்கத்தோன்றும். நியாயமான கேள்வி! ஆனால் பதில் உடன் தரமுடியாத கேள்வி!

கூரிய மூளை படைத்த அவர் சும்மாயிருக்கமாட்டார், என்று நேரு எண்ணுகிறார்! அதைப் போலத்தான் நீங்களும் எண்ணுகிறீர்கள்!

நாம், சும்மாயிருக்கமாட்டார் என்பதோடு மட்டுமல்ல, மேலும் அவர் செய்யக்கூடுமோ என்று சந்தேகிக்கும் காரியங்களை, கண்முன் நிறுத்தி, சிந்தனை செய்கிறோம்!

சிங்காரம், பிறந்த மண்ணிலே, பெண்டாட்டியோடு, சிறுகடையை வைத்துக்கொண்டு தங்கிவிடலாமென எண்ணினான். ஆச்சாரியார் கூரிய மூளை படைத்தவராயிற்றே! அவர் அவ்வளவு சாதாரணமாக, தமது அந்தியகால அரசியல் வாழ்வை முடித்துக் கொள்ள மாட்டாரே!

மாக்கியவெல்லி கேட்டவர் மனந் திடுக்கிடும், அரசியல் தந்திரங்களைச் சொன்னான்! நாமோ, அதைவிட திடீர் பிரமைத் தரக்கூடிய முறையில், ஆச்சாரியார் நடத்திய சம்பவங்களைக் கண்டிருக்கிறோம்.

அரசியல் நரித்தனங்களை, ஆட்சி முறையில் புகுத்திக் காட்டினான், மாக்கியவெல்லி. அதைவிட குள்ள நரிக்குறும்புகள் பலபுரிந்தவர், ஆச்சாரியார்!

சமூகத் தொண்டர் என்ற அளவில் அரசியல் வாழ்வு தொடங்கினார். பிறகோ சமூக சீர்திருத்தம் பேசுவோரையே கேலி பேசினார்!

சட்டசபை நுழைவு கூடாது என்று காங்கிரஸ் பேசியபொழுது, இவரே அதற்குத்தலைமை வகித்தார். பிறகு, தானே பிரதமராக வந்தார்!

எல்லா மாகாணங்களிலும், காங்கிரஸ், யுத்த காலத்தில் ஒத்துழை

டிசம்பர் 13, 14, 15, 16 நாட்களில்

யாமை ஆரம்பித்த நேரத்தில், மந்திரி சபையை ராஜினமா செய்ய தீர்மானித்தபொழுது எதிர்த்தார்! பிறகோ அடங்கினர்!

பிரிவினை கூடாது என்று பேசினர்! பாகிஸ்தான அவசியம் என்று அவரே, காக்கைத் திருப்பிக்கொண்டார்!

இப்படி, சமூகசீர்திருத்தத்திலே தொடங்கி, அந்நாள் உன்னதப்பதவியான கவர்னர் ஜெனரல் வரை சென்ற அவர் எத்தனை கொள்கைகளை, கோட்பாடுகளை, தன்காலடியில் போட்டு மிதித்துக்கொண்டு கடந்தார், என்பது விவரிக்க வேண்டாத செய்தி!

இந்த அரசியல் நரித்தனங்களை நேரு அறிவார். அதனல்தான் கூரிய மூளை படைத்தவர் என்பதிலேயே, அவைகளை அடக்கிக் குறிப்பிட்டார்.

ஆகவே பயந்துகொண்டு தங்கள் மூளைத்திறம், எங்கள் ஆட்சிக்குத் துணை செய்யவேண்டும், என்று கேட்டுக்கொண்டார்! ஆனல், ஆச்சாரியார் முடியாதென்று மறுத்துவிட்டார்!

* * *

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்! கரடி, வெம்புலி வாயையும் கட்டலாம்! சிங்கத்தின் முதுகிலே சவாரி செய்யலாம்! இரும்பை பொன்னக்கலாம்! புனல்மேல் நடக்கலாம்! கனல்மேல் இருக்கலாம்! ஆனல், சிந்தையை அடக்குவது முடியாதென்று பாடினர், தாயுமானர். சிந்தையை அடக்கி சும்மாயிருக்கும் திறமரிது காண் என்றர் அவர். ஆம், அதுவும் கூரிய சிந்தையைஅடக்கிசும்மாயிருப்பதரிது; அதிலேயும், ஆச்சாரியாரின் கூரிய மூளையை அடக்கி சும்மாயிருப்பதரிது!

நேரு புரிந்து கொண்டு தான் வேண்டினர்! ஆச்சாரியார், அவர் வருந்தினலும் பரவாயில்லையென்று மறுத்து விட்டார்!!

ஆச்சாரியாரின் கூரியமூளை, இனி டெல்லிக்கில்லை! ஆனல், சென்னைக்குஉண்டு என்று அவர் சொல்லவில்லை!

டெல்லிக்குப் பிரார்த்தனை யென்றரே தவிர, சென்னைக்குப்பிரார்த்தனையென்று கூறவில்லை. ஆகவே சென்னைக்கு அவரது கூரிய மூளை பயன் படலாம்!

டெல்லிக்கு கிடைக்காத மூளை, சென்னைக்கு அளிக்கக்கூடும். ஆச்சாரியார்!

அந்த கூரிய மூளை சும்மாவும் யிருக்காது! ஏதேனும் செய்தே தீரும்! அதுதான் என்ன என்பது புரியவில்லை! பிரிந்து வருகிற நேரத்தில், தனது கூரிய மூளை, டெல்லிக்கு இல்லை யென்று கூறினர்! அது மட்டுமா?

ஒரே இனமாக, பலமதத்தவரும், சேர்ந்திருக்கிறர்கள் என்பதை இன்னமும் நாம் நிரூபிக்கவில்லை. அதனை நாம் நிரூபித்தாக வேண்டும்.

ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளார் இப்படி. நேரு இதைக்கேட்டு பயந்திருக்கவேண்டும்! ஆச்சாரியார் வடநாட்டிலிருந்து பிரிந்து தென்னடு செல்கிறர். தென்னட்டை வடநாடு அவமதிக்கவில்லை யென்பதின் அடையாளமாக ஆச்சாரியார் இதுவரை டெல்லியில் நிறுத்திவைக்கப்பட்டார். அவர் போகிறர். போகிற நேரத்தில், பிரிவினை நிலைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி சொல்கிறர்! அவரோ, பிரிவினை கூடாது என்று பேசி, பிறகு பிரிவினைதான், தக்க மருந்து என தத்துவத்தை மாற்றிக்கொண்டவராயிற்றே என்றெண்ணும்பொழுது நேரு நெஞ்சு பதறித்தானிருப்பார்!

கூரிய மூளை, சும்மாயிருப்பதில்லை. தென்னடு செல்லும், இந்த கூரிய மூளை மட்டும் அதற்கு விதிவிலக்கோ, என்றெண்ணியிருக்க மாட்டாரா? அதனல்தான் அவர், பிரிவினை மனப்பான்மை நிலைத்திருக்கிறது என்று குறிப்பிட்டவுடன் திடுக்கிட்டுப்போயிருப்பார்.

ஆச்சாரியார் அத்தோடு நிறுத்தவில்லை!

டெல்லியை விட்டு நீங்கியிருக்கும் பொழுது, அவர் டெல்லியிலிருந்து நல்ல செய்திகளை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்! நல் சேதி, அவருக்கு, சென்னையிலிருக்கும் பொழுது, எதுவாக இருக்குமோ என்று நேரு நினைக்கி பொழுது அவர் முகம் மாறித்தானிருக்கும்.

பூமணத்தோடு திரும்பாத சி காரந்தான், ஆச்சாரியார்! ஆகவே தான் பூமணத்தோடு அனுப்பா டெல்லியிடம் அவர் எப்படி நடந் கொள்வார், எனசிந்தனையைக் குழப்பிடுகின்றனர் பலர்! அவரோ நவீ மாக்கியவெல்லி, ஆகவே எதையு செய்வார் எனப் பேசுகின்றன சும்மா கூரியசிந்தையை அடக் யிருக்கும் திறமரிது என்கிறே நாம்!

—❀—

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., எழுதிய

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

விலை அணு 12

- விற்பனை கழிவு 25o/o
- எட்டுப் படிகளுக்குமேல் வாங்குவோர்க்கே கழிவு தரப்படும்.

அஞ்சல் செலவும் ஏற்கப்படும்.

- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தகம் அனுப்பப்படும்.
- தனிப்படி வேண்டுவோர் சாதாரண அஞ்சலில் அனுப்ப அணு 1-ம் பதிவு அஞ்சலில் அனுப்ப அணு 5½-ம் சேர்த்து அனுப்புக.

மன்றம் பதிப்பகம்

12, வைத்தியநாத முதலி தெரு

சேத்துப்பட்டு :: சென்னை 10.

தேர்தல் புயல் வீசுகிற நேரத்தில்

ஓவியக் கலை

உலகப் பொது அறிவுக்கு முரணான, முன்னேற்றத்துக்குப் பெருமத் தடையாக உள்ள, காரணம் ஏதுமற்ற, கவைக்குதவாத கதைகளை நம்நாட்டு மக்கள், புண்ணிய ஏடுகளென்று போற்றி, அவைகளிலே கூறப்பட்டுள்ள காட்டுமிராண்டிக் காலத்துக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்ட, சடங்குகளை பூஜைகளை, திருவிழாக்களை இன்றளவும் நடத்திக்கொண்டு, அதன் காரணமாக, அறிவு, காலம், பொருள் ஆகியவற்றை பாழ்படுத்திக் கொள்கிறார்கள். இந்தப் போக்கு தீதானது, நாட்டு முன்னேற்றத்துக்குக் கேடுபயப்பது என்று எவ்வளவு இதமாகக் கூறினாலும் ஆதாரங்கள் காட்டி விளக்கினாலும், பாமரர், கோபிக்கிறார்களே யொழிய திருந்த முற்படுகிறார்களில்லை. ஏன்? அவ்வளவு ஆழமாகப் பதிந்து விட்டிருக்கிறது, அந்தக் கதைகளும் அவைகளை யொட்டி வளர்ந்துள்ள கருத்துகளும். எப்படி? அவ்வளவு புராண இதிகாசாதிகளையும் படித்து ரசித்து, பொருளறிந்து, கொண்டதாலா! இல்லை, இல்லை! பெரும்பாலானவர்கள் தற்குறிகள். ஏடு படித்து அல்ல—புராணீகக் கருத்துகளைக் கதையாகக் கூறக் கேட்டனர்—கூத்தாகக் கண்டனர்—ஓவியங்களாகக் கண்டனர்—உள்ளத்திலே கருத்துகள் புகுந்து கொண்டன. கையெழுத்துப் போடத் தெரியாதவனும் கண்ணன் வெண்ணெய் திருடி, தேரோட்டி, பாரதத்தை நடத்திய கதையை அறிவான்! இவை பற்றிய காட்சிகள் தலைமுறை தலைமுறையாக் கூட்டப்பட்டதன் விளைவு இது.

மீண்டும் மனத்தெளிவும் மதிநுட்பமும், பெரும்பான்மையினரான மக்களுக்கு ஏற்பட வேண்டுமானால், அவன் எழுதப்படிக்கத் தெரிந்தவனாகி, கசடறக் கற்று, கற்றபின் சிந்தித்து, நல்லது கொண்டு அல்லது தள்ளிடும் திறம் பெறல் வேண்டும். எவ்வளவு காலம் பிடிக்கும் இதற்கு என்று எண்ணிடும்போது, பெருமூச்சுதான் பதிலாகக் கிடைக்கும். ஆனால், பாமரனின் மனத்தளைகளை அறுத்திட வேறு மார்க்கமே கிடையாதா! நிச்சயமாக உண்டு. இசையும் கூத்தும் இனி அவன் மனமருளை ஓட்ட பயன்பட வேண்டும்—இந்த முயற்சியில் ஓரளவு வெற்றியும் கிடைத்திருக்கிறது. ஓவியங்கள் மூலம், எழுத்தறியா மக்களுக்கு உலக அறிவை ஊட்டமுடியும். அவன் ஏடுபல தேடிப் படித்துப் பெறக்கூடிய பக்குவத்தை வண்ணக் கலயமும் தீட்டுக் கோலும் கொண்டு அற்புதம் பல புரியும் ஓவியன், தரமுடியும். பாமரன், பாரிஸ் போகாமலே. அந்தப் பட்டினத்து எழிலைக் காணட்டும்—கிடைக்கிற அறிவின் அளவு குறைவுதான், எனினும், இதனையும் அவன் பெற இன்று இடமில்லையே! நாட்டு வரலாறு, உலக வளர்ச்சி, விஞ்ஞான முன்னேற்றம், பெரியோரின் பொன்மொழிகள், நெஞ்சையள்ளும் நிகழ்ச்சிகள், ஆகியவற்றினை ஓவியக் காட்சிகளாக்கி, நகரங்களிலே மட்டுமல்லாது, பட்டி தொட்டிகளிலும், எடுத்துச் சென்று காட்டி, விளக்க உரையும் தந்தால், ஒரு சில ஆண்டுகளில், பல்கலைக் கழகம் சென்றால் மட்டுமே பெற இயலும் என்று கருதப்படும் பொது அறிவுப் பக்குவத்தைப் பாமரனும் பெறமுடியும்.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது பிரச்சார முறைகளிலே ஒன்றாக, இப்போது ஓவியக்கலையைப் பயன்படுத்த முனைந்திருக்கிறது.

முத்தமிழ் இங்ஙனம் இதுநாள் வரை மூடபக்திக்கு உரமூட்டப்பட்டுமே பயன்பட்டு வந்தது. அந்த நிலையை ஓரளவுக்கு மாற்றிக் காட்டியிருக்கிறோம்—கலையைக் கேவலம் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவதா என்று கேட்கும் கலைத்துறையினர் ஓர்புறம் சீறவும், நாடகமாடுவதா நாட்டு விடுதலைக்கு வழி என்று அரசியல் வாதிகள் நையாண்டி செய்யவும் காண்கிறோம் — என்றபோதிலும் பழித்துரைப்போரே; மறுநாள் கலையைத் தமக்குக் கருவியாக்கிக் கொள்ள முற்படுவதையும் காண்கிறோம்—களிக்கிறோம்.

ஓவியக்கலையையும் நாம் இப்போது பகுத்தறிவுப் பணிக்குப் பயன்படுத்த முனைவது கண்டு, தூய்மையான கலையைக் கேவலம் பிரசாரக் கருவியாக்குவதா என்றும், சிறுபிள்ளைகள் வேறென்ன செய்யும், படம் கிறுக்கிக்கொண்டிருக்கின்றன என்றும், பதை பதைத்துச் சிலரும் பேச முன் வருவர். ஆனால் அவர்களையே கூர்ந்து கவனிக்கும்படி ஓவியம் அழைக்கிறது என்பதுதான் கண்டன உரையும் கேலியும் எடுத்துக் காட்டுகிறது. அவர்களையே இழுக்கிறது என்றால் மக்களிடையே அதிலும் புதிய புதிய எண்ணங்களைப் பெறவேண்டும் என்ற துடி துடிப்பு உள்ள மக்களிடையே, ஓவியக்கலை எத்தனை பயனை ஊட்டும் என்பதை எண்ணும்போதே மகிழ்ச்சி மலருகிறது.

ஓவியக் கலையைப் பகுத்தறிவுப் பணிக்குப் பயன்படுத்த சிறிது பொருள் அதிகம் தேவைப்படும். எனினும் இதற்கான முயற்சியில் ஈடுபடத் தீர்மானித்து, காரியம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

மாநில மாநாட்டிலே ஓவியக் காட்சி, இடம் பெறுகிறது—மாநாட்டுக்குக்கூடும் பல்லாயிரவர் உள்ளங்களிலே இது சிறப்பான இடம் பெறும் என்று நம்புகிறோம்.

நாலு திங்களாக, நமது இயக்கத் தோழர்களாக உள்ள ஓவியர்கள்—

(7-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. மாநில மாநாடு நடைபெறுகிறது!

திராவிடநாடு

காஞ்சி] 4—11—51 [ஞாயிறு

"பல்லக்கு" பூமியிலே!

"கடிதங்கள், எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன?"

"ஆங்கில மொழியில்...!"

"உடனே, திருப்பி அனுப்பு"

* * *

"எகிப்து வாழ்க! வீழ்க ஆங்கில ஏகாதிபத்யம்!!" இந்த புரட்சி அலைகள் கடந்த சில வாரங்களாக, மத்ய தரைக் கடலின் அலைகளோடு போட்டியிட்டுக் கொண்டுள்ளன. எங்கும் எக்காளம்! போர் முழக்கம்! சின்னஞ் சிறுநாடு, எகிப்து உலக வல்லரசுகளில் ஒன்றெனப் பெருமிதத்தோடு உலாவும் பிரிட்டனை எதிர்க்கிறது—தோள் தட்டுகிறது. பிரிட்டிஷார் தங்கியிருக்குமிடங்கள் தகனம்! அவர்களது அலுவலகங்களிலே கல்மாரி! ஓடு! விரட்டு! என்கிற உரத்த முழக்கங்கள்.

"எகிப்து நாட்டிலா?" என்று, உலகமே வியக்கிறது, எகிப்து மக்களின் போர் முரசு கேட்டு. "ஆங்கில ஏகாதிபத்தியம்பிடிவாதத்தால் நம்மை வீழ்த்திட முடியாது. ப்ரூக் மன்னரின் செல்வாக்கை, அழித்துவிட, அனுமதியோம்" என்று, வீரச்சிந்து பாடுகிறார், எகிப்துப் பிரதமர் நஹாஸ் பாஷா. கடந்த சில வாரங்களுக்கு முன், எகிப்தின் ஒரு பாகமாகிய சூடான் பிரதேசத்தை, எகிப்தோடு இணைத்து, இரண்டையும், எகிப்து மன்னர் பரூக்கின் ஆட்சிக்குட்பட்டது என, பிரகடனம் செய்ததீர், அவர். சூடான்—1899முதல் பிரிட்டிஷ் சிங்கம் பெருமிதத்தோடு உலவிய சிங்கார பூமி, நைல் நதி தீரம்! அதை, எகிப்து, தனக்குட்பட்டதாகச் செய்தது—இரண்டு நாடுகளிலும் வாழ்வோர், ஒரே இனத்தவர்; இஸ்லாமிய சகோதரர்கள் என்பதால்!

"அந்நியனுக்கு இங்கென்ன வேலை? ஆங்கிலேயருக்கு இங்கென்ன சாம்ராஜ்யம்?" என்ற கேள்விக் கணை எழுப்பி, ஆங்கிலேயருக்கு அடங்கிக்கிடக்கமாட்டோம் என்ற முடிவுக்கு வந்து விட்டது, எகிப்து, பார்லிமெண்டு. இந்த முடிவை யொட்டி, பல்லாண்டு காலமாக இருந்துவரும், "ஆங்கிலோ—எகிப்திய ஒப்பந்தத்தை" ரத்து செய்துவிட்டது. சூயஸ் கால்வாயிலிருந்து பிரிட்டிஷ் படைகளை அகற்றச் செய்வது, என்கிற, நோக்கத்தோடு இவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டது.

எகிப்தின் சுதந்திரப்பள்ளு,பிரிட்டனை கதிகலங்கவைத்து விட்டது. எகிப்து மக்களின் இதயஒலிகேட்டு திகைத்துவிட்டது, பிரிட்டிஷ் சர்க்கார். திகைப்பு அதிகமாகி, ஆத்திரம் வளர்ந்து இப்போது 'மிரட்டல்' கட்டத்துக்கு வந்துவிட்டனர். துருப்புகள் அதிகமாகின்றன! படைகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன! ஏராளமான விமானங்கள், தளபதிகள், நைல்நதி முனையிலே குவிக்கப்படுகின்றனர்!

இந்த ஆர்ப்பாட்டங்கள், எகிப்து சர்க்காரின் சுதந்திர கீதத்தை அடக்கவில்லை. எரியும் நெருப்பில் எண்ணெய்விட்டது போலாகிவிட்டது. பிரிட்டனின் ஆர்ப்பரிப்பு காணக்கான எகிப்து மக்களின் எழுச்சி அதிகரிக்கிறது! அதன் காரணமாக, வர வர சுதந்திரக் கனல் வெகுவேகமாக, எரிகிறது! சூயஸ்கால்வாயில் ஆங்கிலேயருக்குக் கீழ் வேலை பார்க்கும் 70,000 துறைமுகத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. பிரிட்டிஷ தளங்கள்மீதெல்லாம், ஆத்திரமடைந்த எகிப்து மக்கள் தாக்கத் துவங்கிவிட்டனர்! எகிப்திய சர்க்காரும், பிரிட்டனுக்கெதிராக பலவித நடவடிக்கைகளை மேற்கொள்ளத்துவங்கிவிட்டனர். சூடானில் தங்கள் ஆட்சியைத் துவங்கிவிட்டனர். ஆங்கிலேயருக்கு காவலையும் கட்டுப்பாடுகளையும் அதிகரித்து விட்டனர். "ஆங்கில மொழியில் கடிதங்கள் எழுதினால், சர்க்கார் கவனிக்காது. அராபியமொழியிலே எழுதப்படவேண்டும்" என்று உத்திரவுகள் பிறப்பித்துவிட்டனர்!

* * *

துப்பாக்கியும் பீரங்கியும் சாதிக்காத செயல்களைத் தங்கள சூழ்ச்சியாலும் தந்திரத்தாலும் வெற்றிகரமாக்கிக்கொண்ட பெருமை பிரிட்டிஷ்காரர்களுக்குண்டு. தோளில் துப்பாக்கி இல்லாது, இரத்தம் சிறிதும் சிந்தாது, தங்கள் ராஜதந்திர மூலம், அவர்கள் பெற்ற வெற்றிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிகப்பல.

வியாபாரப் போர்வையில் வந்து வீழ்த்தினர் இந்தியஉபகண்டத்தை. அதைப்போல, ராஜதந்திரமூலம் தங்கள் 'யூனியன்ஜாக்'கைப் பறக்க விட்டனர், மத்யதரைக்கடல் பிரதேசத்தில்.

மத்ய தரைக்கடல், பல சாம்ராஜ்யங்களின், பல்லக்கு. மேற்கத்திய வல்லரசுகளின் கப்பல்கள் செல்லும் கடல்மட்டுமல்ல அது, இரு வேறு உலகங்களின நாகரிக சந்திப்புமுனையாகவும் இருக்கிறது. காலமெனும் அலைகள், அந்தக் கடலின் அலைகளிலே மிதக்கவிட்டிருக்கும் சரித்திர நிகழ்ச்சிகள் பலப் பல.

மத்தியதரைக் கடலின் அலையோசையில், சமுதாய வளர்ச்சியெனும் சரித்திரத்தின் கீதம் கேட்கும். நாகரிகம் வளர்ந்ததையும், பற்பல நாகரிகங்கள் மோதிக்கொண்டதையும், அந்தக்கடல் அறியும்!

அந்தக் கடலைத்தொட்டு முத்தமிடும் பலப்பல நாடுகள் வீழ்ச்சியுற்ற கதையை நினைத்தால் கால வெள்ளம் கண்ணிலே புரளும். மறைந்த சாம்ராஜ்யங்களின் சாம்பல் மேடைகள் ஆங்காங்கே கிடக்கின்றன. சரிதக்காலத்தின் புகழ் ஸ்தூபிகளாக நிற்கும், எகிப்து நாட்டின் 'பிரமிட்' கோபுரங்கள், சொல்லும் நினைவுகள்தான் கொஞ்சமா! நீரை முத்தமிடும் அந்தக் கிரேக்கர்கள் பூமி—அங்கே வெற்றி முழக்கம் எழுப்பிய வீராதி வீரன் அலெக்சாண்டர்! வளைவுகளோடு, எத்தனையோ வளைவு நெளிவுகள் என் வாழ்விலே ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லும் ரோம் சாம்ராஜ்யம்—அங்கே சிம்மமென உலவிய ஜூலியஸ் சீசர்! "அழகியை வளர்த்தோம் — அவளால் எம்

"பெருமையையே இழந்தோம்" என்ச் சொல்லாது சொல்லும், கிளிமொழியாள் கிளியோபாட்ரா வாழ்ந்த எகிப்து! "இங்கேதான் பிறந்தார் உலக அன்பால் வாழ்விக்கவந்த இயேசு" என்று கூறும், பெத்லகம் நகரம்! "இங்கேதான் மாவீரன் நெப்போலியன் தோற்றான்—அவனை வெற்றிகொண்டான் வீரத் தளபதி நெல்சன்" என்று சொல்லும் நைல் நதி முனை! போராடினான், தோற்றான். அவனது பெருமூச்சுகள் என்மீது தான் மோதின. நெப்போலியன் என்மீதுதான் வாழ்ந்தான்" என்று கூறும் சிங்காரத் தீவு—எல்பா!

இத்தனைச் சிறப்புகளையும் பெற்ற மத்ய தரைக் கடற்பிரதேசத்தில், எளிதில் தம் சாம்ராஜ்ய நிழலைப் படரவிட்டனர், பிரிட்டிஷார்.

உலகையே அலறச்செய்த ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி, "அதிகாரம்" என்கிற மணி முடியை, மேற்கத்திய நாடுகளுக்குக் கொண்டு சென்றது. ஆனால் மூன்று உபகண்டங்களின் கடலலைகள் தாவிக்குதிக்கும் எகிப்து மட்டும் நெடு நாள், வீழவில்லை. அதையும் தங்கள் போர்த்தளமாகவும், வல்லரசு மேடையாகவும், பிரிட்டிஷார் ஆக்கினர்— ஒப்பந்தங்கள் மூலம்.

அதற்கு, கடந்த உலகப் போர் உதவிசெய்தது. பிரிட்டன் அதன் மூலம், ஈராக், பாரசீகம், சிரியா, ஜோர்தான், பாலஸ்தீனம், எகிப்து, சூடான் முதலாய பல நாடுகளின் தலைவனாக ஆயிற்று. அதோடு, மால்டா, சைப்ரஸ் முதலிய சின்னஞ் சிறு தீவுகளின் காவலனாகவும் ஆயிற்று. அரபு நாடுகள் தலைவணங்கும் மத்யதரையின் மணிச்சுடர் போல விளங்கி வந்தது, பிரிட்டன்.

இப்போது, அந்தச்சுடர் அணையும் காலம் நெருங்கி விட்டது. ஜோதி என்றும் நிலைக்க எண்ணெய் வேண்டுமே! அந்த எண்ணெய் மிகுந்த, டாரசீகம், வீரப்பண்பாடி பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வெளியேற்றி விட்டது. ஈராக்—அதுவும் பிரிட்டனுக்குக் கீழிருந்து இப்போது நேசநாடாகயிருப்பது-அதுவும் சுதந்திரப்பள்ளு பாடுகிறது! பாலஸ்தீனம், இரண்டாண்டுகளுக்கு முன்பே, சுதந்திரநாடாக ஆகிவிட்டது—இரு நாடுகளாக ஆகி. சிறு நாடு, ஜோர்தான். அங்கும் அதே நிலை! இப்போது, எகிப்து போர்முரசு கொட்டுகிறது!

* * *

மத்யதரைக்கடல் பிரதேசத்தில், சுதந்திரம் மலர்வது, ஏகாதிபத்திய வல்லரசுகளை திடுக்கிடச் செய்திருக்கிறது. அமெரிக்காவும், பிரான்சும், பிரிட்டனின் செல்வாக்கு மங்குவது காண மருள்கின்றன. காரணம், மத்தியதரையின் அண்டை நாடான ரஷ்யா இந்த வட்டாரத்தின் தோழனாக ஆகிவிடுமோ என்கிற சஞ்சலத்தால்! ரஷ்யாவுக்கு இந்தப் பிரதேசத்தில் செல்வாக்கு அரும்பிவிட்டால், ஏகாதிபத்ய நாடுகள், ஐரோப்பாவில் தங்கள் செல்வாக்கை நிலைநாட்ட முடியாது. இந்தப் பயத்தால், மத்யதரையை, மகா கவனத்தோடு நோக்குகிறது, அமெரிக்கா. இந்தப்பயம் காரணமாகவே, மத்யதரைக்கடல் பிரதேசப் பாதுகாப்பு என்ற பெயரால் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி முதலிய நாடுகள் ஒன்று சேர்ந்து ஒரு முன்னணி ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இந்த முன்னணியின் கடற்படை தளபதியாக மவுண்ட்பேட்டனையும் நியமித்துள்ளனர். இந்தக் கூட்டணியில் சேர எகிப்து, மறுத்தது! "இந்தக் கூட்டணிக்கு பிரிட்டன் தரவேண்டிய துருப்புகளைவிட அதிகமான படைகள் இருப்பது கூடாது—அது எங்களை மிரட்டுவது போலிருக்கிறது. நியாயப்படி பிரிட்டன் நடக்கட்டும்!" என்று காரணம் காட்டி, எகிப்து சேரவில்லை!

நியாயம் நிரம்பிய இந்தக் காரணத்தை பிரிட்டன் ஏற்கவில்லை. தனது செல்வாக்கு குறைகிறதே என்ற வெறியோடு, சிம்மநாதம் செய்கிறது. படைகளையும் ஆகாய விமானங்களையும் சூயஸ் கால்வாய்க்கு அனுப்பப் போவதாக சர்ச்சில் கர்ஜிக்கிறார்.

இந்நிலை வளர்ந்தால், எகிப்தும் ஏனைய அரபுநாடுகளும் ஒன்று சேரும். அதனால் மத்யதரைக்கடலின் நீர் செந்நீராகவும் மாற நேரலாம்! போர் முழக்கத்தால், மற்றோர் முறை மத்யதரைக்கடலின் அலைகள் அதிர நேரலாம்!

அந்நிலை ஏற்படின், ரஷ்யவல்லரசும், ஒத்துழைக்க முன்வரலாம்—அரபுநாடுகளுடன். இதன் விளைவு, மூன்றாவது உலகப்போரையே சிருஷ்டிக்கலாம்!

• தங்களது ஆதிபத்திய வெறியால் பொதுவுடைமையும் முதலாளித்துவமும், மத்ய தரையில் மோதச் செய்யும் நிலையை பிரிட்டன் ஏற்படுத்துமேயானால், உலகமே பிரிட்டனை சபிக்கும்! அரபு மக்களின் கண்ணீர், பிரிட்டனை பழி வாங்கும்!

இந்தக் கோர நிலை தடுக்கும் சூத்திரம் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கையில் இருக்கிறது.

அமைதிப் பாதையில், சர்ச்சில் சர்க்கார் செல்வதையே சமாதானம் விரும்புவோர், வரவேற்பர்; இன்றேல், புயலும் எரிமலையும்தான் உலகில் தாண்டவமாடும். அந்தப் பழியைப் பரிசாகப் பெறாது, தன் புகழை பிரிட்டன் நிலைநாட்டிக் கொள்ளுமாக.

5-ம் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்கள்—காட்சிக்காக ஓவியங்களைத் தீட்டியவண்ணம் உள்ளனர்.

அரசியல் நிலைமைகளை விளக்கும் கேலிச் சித்திரங்கள், விஞ்ஞான விளக்கப்படங்கள், உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் ஓவியங்கள் என்று இம்முறையிலே பல தீட்டப்பட்டு வருகின்றன.

மாநில மாநாட்டுக்காக என்று கருதித்துவக்கப்பட்ட இந்த ஓவியக்காட்சி, அந்தஅளவுடன்நிறுத்தி வைக்காமல், மேலும் பலவும், தொடர்ச்சியாகவும் ஓவியங்களைத் தீட்டி, கண்காட்சியை, நாடு முழுவதும் கொண்டு சென்று காட்ட வேண்டும் என்ற ஆர்வம் மலர்ந்திருக்கிறது.

இந்த ஆர்வத்துடனேயே இப்போது ஓவியங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மாநில மாநாட்டிலே இதைக்கண்டு கருத்து விருந்து பெற வாரீர் என்ற கனிவுடன் அழைக்கிறோம். இதைத்தனியா[illegible] நிரந்தரமான 'துறை' யாக[illegible] அமைக்கத் திட்டமிட்டிருப்ப[illegible] மாநாட்டிலே வருவோர், இந்த [illegible]யக்காட்சியைக்காண தங்கள் [illegible] தலைத் தெரிவிக்கும் மு[illegible] ஒரு அணு நுழைவுக் கட்[illegible] செலுத்தி, ஓவியத் துறையை [illegible] வளமுள்ளதாக்கிட வே[illegible]கிறோம்.

சுழலும் சக்கரம்

★

பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில், இங்கிலாந்து வியந்து, பெருமிதத்துடன் மார் தட்டியது, தனது போர் வீரன் ஒருவனின் வெற்றிகளைக் கண்டு! தோல்வியே தெரியாத அந்த மாவீரன், வெற்றி மலர்களை ஆரமாகத் தொடுத்து, தனது அரசி ஆன் என்பவளின் கழுத்திலே அணிவித்து மகிழ்ந்தான். அவளின் அன்பைப் பரிசாக்கி மகிழ்வித்தாள் அவள்! அவன்தான் மார்ல்பரோ கோமகன்.

மார்ல்பரோ வம்சத்தின் நேரடி வழி வந்தவர்தான், வின்ஸ்டன் சர்ச்சில். வாழையடி வாழையாக வந்த நீண்டதொரு பரம்பரை, தொடர்ந்து வந்த மன்னர்களும் துதி பாடிப் பாராட்டிய குடும்பம்.

ஆனால், குலப் பெருமை பாராட்டிக் கொள்வதுடன், மன நிம்மதி அடைந்து வீணே காலத்தை விரயமாக்கவில்லை, வின்ஸ்டன் சர்ச்சில். அவர், மார்ல்பரோ கோமகனின் கீர்த்திக்கும் கீர்த்தி தரும் வகையில், எதிரியை நொறுக்கி, வாகை மாலை சூடி வெற்றி முரசு கொட்டினார், இரண்டாவது உலகப் போரில். ஒரு சில போர் விமானங்களே கைவசமிருந்த போதிலும், விண்ணதிர இடிமுழக்கம் செய்து, நாட்டைக் காப்பாற்றினார்.

ஆனால், போர் முடிந்ததும், 1945-ல், பிரிட்டிஷ் மக்கள் அவருக்குத் தந்த பரிசோ, அவரடைந்த போர் வெற்றியைக் காட்டிலும் விந்தையானது. "நீங்கள் செய்த உதவிக்கு நன்றி. ஐந்தாண்டுகளாக இரவு பகலாக உழைத்துப் போரை நடத்தியது போதும். இனியும் நீங்கள் நாட்டுப் பிரதமர் பாரத்தைத் தாங்கி நலிவுற வேண்டாம். வீட்டிற்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். வணக்கம்"— ஹிட்லர் வீசிய குண்டுகளின் பளுவைக் கூடத் தாங்மாட்டாது, பிரிட்டன் அட்லாண்டிக் கடலின் அடியில் அமிழ்ந்து விடுமோ என்று உலகம் அஞ்சி நடுங்கி நின்ற சமயத்தில் நாட்டைக் காப்பாற்றிய பிரதமருக்கு, பிரிட்டிஷ் பொது மக்கள் அளித்த காணிக்கை இது!

தொழிற் கட்சித் தலைவர் அட்லி பிரதமராக வந்தார், சர்ச்சில் பதவியிலிருந்து விலகினார். இது ஆறாண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம்.

நன்றி கெட்ட வீணர்கள், அறிவிலிகள், நன்மை தீமை உணர முடியாத ஆணவம்படைத்தவர்கள், என்றெல்லாம் அவர் வாக்காளர் மீது வசைபாடி விட்டு, வீட்டிற்குச் செல்லவில்லை.

மறுபடியும் வாக்காளரிடம் சென்றார். தன் கட்சி சாதித்தவைகளை எடுத்துச் சொன்னார். பதவிக்கு மறுபடியும் வந்தால், தான் என்னென்ன செய்வதாக உத்தேசம் என்பதை, வாக்காளருக்கு மறுபடியும் மறுபடியும் இடைவிடாது கூறினார்.

சென்ற ஆண்டு பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலில், வெற்றிக் கோட்டை கிட்டத்தட்ட நெருங்கிவிட்டார். ஒரு சில ஸ்தானங்கள் குறைந்ததாலேயே கன்சர்வெடிவ் கட்சியினர் மந்திரி சபை அமைக்க முடியவில்லை.

இப்பொழுதுதான் சர்ச்சில் மறுபடியும் பிரதமர் நாற்காலியில் அமர்ந்துள்ளார்.

சர்ச்சிலின் வெற்றி பிரிட்டிஷ் முற்போக்கு சக்திகளுக்கு ஒரு தோல்வி என்றுதான் கூறவேண்டும். இனி, தொழிற் கட்சியின் தீவிர, தேசியத் திட்டங்கள் கைவிடப்படும். நடுத்தர, ஏழை வகுப்பினரின் நலன்களுக்கான செலவுகள் துண்டிக்கப்படும். தனி முதலாளிகளின் கை ஓங்கி நிற்கும்.

இவ்வளவும் தெரிந்துதானே பிரிட்டிஷ் பொதுமக்கள் சர்ச்சிலைத் தேர்ந்தெடுத்தனர்? என்ற கேள்வி இங்கு எழுகிறது. ஆம், தெரிந்துதான் செய்தனர், தங்கள் நலங்கருதி.

கன்சர்வெடிவ் கட்சி அரசாங்கம் நடத்தினால்தான் அமெரிக்கா உதவி செய்யும். இன்னும் கொஞ்ச காலத்திற்காவது அமெரிக்க டாலர் தங்கு தடையின்றி குவிந்தால்தான் பிரிட்டின் மறுபடியும் செழிக்க முடியும்.

இந்த நாணுக்கத்தை பிரிட்டிஷ் பொது மக்கள் அறிந்திருப்பதால்தான், வெற்றி தேடித் தந்த வீரனுக்கு, அன்று அளிக்காத பதவியை இன்று அளித்துள்ளனர்.

மறுபடியும் சக்கரம் சுழல்வதற்கு வெகு நாளில்லை! ✲

11-ம் பக்கத் தொடர்ச்சி

நானே, உங்கள் கஷ்டத்தைப் போக்குகிறேன். நீ, என் வாரிசாக ஆகிறாயா?"

பரிதாபத்தோடு கேட்டார், நமசிவாயம். "பணம், இலட்ச இலட்சமாகவரும்!"

"பணம் வரும். ஆனால் குமுதா?"

"பம்பாயில் அவள். நாம் இங்கா?"

"அவளை வளர்க்க நாம் பட்ட பாடு. அதை, இப்போது..."

இந்த குழப்பத்தில் கிடந்தனர், அஞ்சலையும், முத்துவும்.

நமசிவாயம், கூறினார்.

"கவலை வேண்டாம், முத்து. என் மகள்தான் அவள். அப்படியே நடத்துகிறேன்..."

என் மகள்...

திடுக்கிட்டார், முத்து. உரிமை, பறிபோவது தெரிந்தது. எங்கும், அந்த வார்த்தைகள் ஒலிப்பது போல இருந்தது. சின்னஞ்சிறு மான்குட்டிபோல் நிற்கும் குமுதாவைப் பார்த்தார். அவளைத் தந்த அன்னையின் முகத்தைப் பார்த்தார். ஆத்திரத்தோடு கூவினார்.

"போ! நமசிவாயம் போய்விடு!! உன் பணமும் பகட்டும் வேண்டாம். நான் பணக்காரனாக விரும்பவில்லை. இந்தக் குச்சி வீடு போதும். சிறு தோட்டம் போதும். நான் ஏழையாகவேயிருந்து விடுகிறேன். என இதயம் ஏழையினுடையதாகவே இருக்கட்டும். நான், வியாபாரியாக மாட்டேன்! ஆகவும் வேண்டாம்!!

பாடுபட்டு நான் வளர்த்தேன்; அதை இன்று பணத்துக்காக நர்த்தம் செய்யமாட்டேன்! பணம் பெரிதல்ல; என் தோட்டம் கண்டு பலர் மகிழட்டும்! அதன் மலர்களை எல்லோரும் வாங்கி மகிழட்டும்! ஒரு சிலருக்காக தோட்டத்தை இழக்கமாட்டேன்! உனக்காக என் கண்மணியையும் இழக்கமாட்டேன்" ✲

பாசீச ஆட்சியின் கடைசி நாட்களில்

அரசியல் கற்பனை

ரோஜா, பூத்தது!

[அண்ணல்]

“ரோஜா, பூத்துவிட்டது!” என்று, குதித்தோடி வந்தாள் குமுதம்.

“அப்படியா?” என்று, கேட்ட அவள் அம்மா, அருகிலிருந்தவரிடம் சொன்னாள். “இதுதான் குமுதா, என் பெண். படிக்கிறாள்.”

நெற்றியிலே நீறு, கழுத்திலே நவரத்னமாலை, தங்கப் பூண் போட்ட தடி கையில், பக்கத்தில் வெள்ளியிலான வெற்றிலைப் பெட்டி இவைகளின் மீது வைத்தகண் வாங்காது, பார்த்துக்கொண்டிருந்தாள் குமுதா. அவள் கவனத்தை, அந்த ‘சிவத்தொண்டரின்’ கேள்வி, திருப்பியது.

“என்னம்மா, படிக்கிறே!”

“வக்கீலுக்கு...”

இந்தப் பதில், அந்த திருவுடையாரை, திகைக்கச் செய்தது. ‘வக்கீலுக்கா?” என்று கேட்பதுபோல, தங்க‘பிரேம்’ போட்ட மூக்குக் கண்ணாடியைச் சிறிது தளர்த்திக்கொண்டு, உற்றுப் பார்த்தார், குமுதாவின் தாயை.

“டாக்டருக்குப் படிக்கச் சொன்னேன். வக்கீலுக்குத்தான் படிப்பேன்னுட்டுது.......” என்று, அவள் தாய் முடிப்பதற்குள், “முத்து” வந்தார். கையிலே உதிர்ந்துபோன மலர்மாலை! வியர்வையால் நனைந்த சட்டை! களைத்த முகம்! வந்தவர், திகைத்தார்—தம் மனைவியோடு ஒரு ‘சிவத்தொண்டர்’ சாங்கோபாங்கமாகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும். இந்தக் காட்சி, அவரை திகைக்கச் செய்தது. ஏனெனில் நீறு பூசியும், நாமதாரியும், ருத்திராட்சமும், தங்க வேஷமும் அவருக்குப் பிடிக்காத விஷயங்கள்! இத்தகையோரைக் கண்டால் ஏளனம் செய்வாள் அல்லது எறிந்து விழுந்து பேசுவாள். கணவன் மேடையில் பேசும் வார்த்தைகளில் ஒரு சிலவாவது, அங்கே எகிறிக் குதிக்கும். ஆகவே, திகைத்தார்.

“அஞ்சலை...இந்தா,” என்று, பூமாலையைத் தந்துவிட்டு, அமர்ந்தார். பூமாலை, அன்றைய சொற்பொழிவுக்கு, கழகத் தோழர்கள் தந்த பரிசு! அதை, மார்க்ஸ் படத்துக்கு சாத்திவிட்டு, “தாகத்துக்குத் தாட்டுமா?” என்றாள்; அவள் மனைவி.

“காப்பி இருந்தால், கொடேன்! களைச்சுப் போயிருக்கான்” — வந்திருந்த, திருவாளர், [illegible]டனை—இது.

திகைப்பு அதிகரித்தது, குமுதாவின் தந்தைக்கு. ‘அவன், இவன்’ என்று பேசும், இந்த ஆள் யார், என்பதை அறியத் துடித்தார்.

அஞ்சலை, ஆரம்பித்தாள்: “தெரியலியா, இவரை?”

“வருஷம் இருபது ஆச்சுல்லே! மறந்திருப்பான்—அதிலும் லோக சேவகன் ஆயிட்டானே. எப்படி ஞாபகம் இருக்கும்”—திருவாளர், சொன்னார்!

திகைப்பு மாறவில்லை, லோக சேவகருக்கு!

“என்னடா. முத்து மறந்துட்டியா. நான்தாண்டா நமசிவாயம்”

“நமசிவாயமா?” — ஆச்சரியத்தோடு கூவினார் முத்து. அருகில் வந்து அமர்ந்தார். நமசிவாயமும் அவரும் சின்னஞ் சிறுவயது முதல் சேர்ந்து உலவியவர்கள். படித்தவர்கள். அண்ணன் தம்பிபோல் பழகியவர்கள். மேடையேறிப் பேசியவர்கள். ஆகவே, ஆச்சரியம், வியப்பு, அத்தனையும் படர்ந்தது அவர் முகத்தில். ‘நீயா? நீயேதானா’ என்று கேட்டார். தங்க பிரேம் கண்ணாடியைக் கழட்டினார், நமசிவாயம். ரத்னமாலையைக் கொஞ்சம் இழுத்துக்கொண்டார், கையில் கிடந்த வைர மோதிரமும், அதனடுவேயிருந்த பச்சைக் கல்லும் ‘டால்’ அடித்தன!

“நானேதான். திகைப்பாயிருக்குதோ? உன் கூட, சுயமரியாதை, புராண ஆபாசம், பொதுவுடமை அப்படி இப்படீன்னு பேசித்திரிஞ்ச அதே நமசிவாயந்தாண்டா!”

முத்துவுக்கு பதில் சொல்ல முடியவில்லை. “ஆமாம் உன் மீது இருந்த.......”

“அதெல்லாம், ஒரு நிமிடத்திலே தீர்த்துட்டேன்!”

மேலும், ஆச்சரியம் அதிகரித்தது. ஏனெனில் முத்துவுக்கிருந்த கடன்கள் ஒரே நிமிடத்திலே தீர்க்கக் கூடியவை அல்ல. அவர் அப்பா, சாகும்போது விட்டுப்போன சொத்துக்களைவிட பலமடங்கு பொறுமானமுள்ள கடன்கள் இருந்தன. அவ்வளவையும் ஒரே நிமிடத்திலே தீர்ப்பது என்றால்!

“எப்படி நமசிவாயம். நீ எங்களை விட்டு எங்கேயோ போய்ட்டேன்னுல்லே நினைச்சோம்!”

“ஆமாம். உங்களை விட்டுத்தான், போனேன். அப்புறம் தான் கடன்களை ஒழிச்சேன!”

“அது, எப்படி?”

“எல்லாம், என்னப்பன் கிருபை தான்!”

இதைச் சொல்லும்போது, வெற்றிலைப் பெட்டிக்குள் இருந்து, ஒரு சிறு லிங்க விக்ரகத்தை எடுத்து கண்ணில் ஒத்திக்கொண்டார்.

முத்துவுக்கு எரிச்சல். கேட்டார், “பரமசிவன் வந்து படியளந்தாரோ?”

“இல்லே! I P கொடுத்தேன்......”

லிங்கத்தை வெள்ளி வெற்றிலைப் பெட்டியில் வைத்தார். நவரத்னமாலை தெரியும்படி, பட்டுச்சால்வையை நாற்காலியில் போட்டார்.

தி. மு. க. மாநில மாநாடு இடம் பெறுகிறது!

"இன்சால்வென்ஸி கொடுத்தான். கடன்காரர்களை கைகழுவினான். இன்று கனஜோராய் இருக்கிறான்!"

"ஆடி ஓடி சம்பாதிக்கும் அவரால் ஒரு நூறு காசை ஒரே நேரத்தில் பார்க்க முடியவில்லை. சொத்தில்லாத நமசிவாயம் இந்தக் களை பாரத்தோடு இருக்கிறார். இது, எப்படி?"

முத்துக்கும் அஞ்சலைக்கும், புதிர் போல இருந்தது. ஒருவேளை, கதைகளில் படிக்கிறோமே அதுபோல, காவியணிந்து சாமியாராகி, கடவுளைக் காட்டுவதாக ஏமாற்றி,... ஏராளமான பணம் சம்பாதித்தானோ?"

சந்தேக விளக்கம் பெற, இக்கேள்வியை வீசவில்லை, முத்து. ஆனால் வேறு விதமாகக் கேட்டார்.

"இத்தனை வருடமும் எங்கேயிருந்தே! என்ன செய்தே!"

"பம்பாயில் பணக்காரர் வசிக்கும் பகுதி தெரியுமோ. 'மலபார் ஹில்ஸ்' அங்கே அருமையான பங்களா வாங்கியிருக்கேன். ஆள், அம்பு ஏராளம் இருக்கா. 'பிசினஸ்' செய்யரேன். பெரிய கார் இருக்குமில் கூட ஒண்ணு கட்டலாமான்னு இருக்கேன்..."

"இவ்வளவுக்கும் பணம்..."

"பைத்தியண்டா, நீ! பணம் சம்பாதிக்கிறதா பெரிசு; அதிலும் பம்பாயில்! பம்பாய்க்காரன்க, பணம் பெருத்தவங்கதான். ஆனா மூளை போதாது, அவன்களை ஏமாற்ற கொஞ்சம் ஆடம்பரம், போதும். ஆங்கிலம் பேச அரைகுறையாத் தெரியணும். பெரிய ஆள்போல உலாவணும்......நான் போனதும், ஒரு ஓட்டலிலே தங்கிட்டு, பெரிய விளம்பரமா கொடுத்தேன்—பத்திரிகையிலே.

"சினிமா நடிகர்கள் தேவை. மதராஸ்காரர் வந்திருக்கிறார். விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தோடெ, ரூபாய் ஒன்று அனுப்பி வைக்கனும்—ரகுகாந்த்" அப்படீன்னு! நான்சொன்னா நம்பமாட்டே. எவ்வளவு பணம் வந்துச்சு தெரியுமோ. சுமார் 13 ஆயிரத்துச் சொச்சம்!"

"அப்படியா....."

"அதை வைச்சு, இப்ப பெரிய பணக்காரன் ஆயிருக்கேன். சொல்றப்போ ரொம்ப சுலபமாயிருக்கு. ஆனா, நான் இந்தப் பணத்தைச் சம்பாதிக்க என்ன பாடுபட்டேன்தெரியுமா. சூது, வஞ்சகம், பொய் — இவை சர்வசாதாரணமாயின. முதலாளி ஆக, இவைதாம்பா முதல்!"

இதைச் சொல்லிவிட்டு, இப்போது ஒருமுறை லிங்கத்தை எடுத்துப் பார்த்துக்கொண்டார்.

"பம்பாய்க்காரன்க, நம்மை எல்லாம்விட கெட்டிக்காரன்க, வியாபாரத்திலே. ஆனா, ஒரு விஷயத்துலேமட்டும் சுலபமா ஏமாத்திப்புடலாம். அதாவது அடிக்கடி கோயில்களிலே ஏதாவது நம்ப பேருலே செய்யனும், புதுசா கோயில் கட்டணும், பக்கத்திலே, இந்த லிங்கம்போலே எதையாவது வச்சுக்கிட்டு அடிக்கடி அதைபார்த்துக்கணும்......"

"அதனாலே......"

"நாம், ரொப்ப பக்திமான்கிற எண்ணத்தை எண்டாக்கணும். இதை ஏற்படுத்த நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா? முஸ்லிம்கள் வருவா, கொஞ்சம் முறைப்பா பேசுவேன். கிறிஸ்துவங்க வருவா, ஏதோ காணக்கூடாதவர்களைக் கண்டதுபோல கடு கடுப்பேன். இதெல்லாம் எப்பவும் இல்லே; யாராவது இந்து மதத்தான் இருந்திட்டா! முத்து, இப்ப என்கிட்டே லட்சம் லட்சமா இருக்குது. ஆனா இதைச் சம்பாதிக்க என்மானத்தை இழந்திருக்கேன். மனச்சாட்சியை வித்திருக்கேன். மோசடி செஞ்சிருக்கேன். ஆனா, இத்தனையும்எதுக்கு? என் ஒரே ஆசை, பணம்; அதைப் பெற, பணமில்லேன்னா, யாரப்பா மதிக்கிறா? பணம்! பணம்!! என்று அலைஞ்சேன். வெற்றி பெற்றேன். வயசு, 50 ஆய்ட்டுது. நான் சம்பாதிச்சேன். சுகம் பெற்றேனா? இல்லே! என்னிடம் குவித்திருக்கும் சொத்தில் ஒவ்வொருகாசிலும் என் இரத்தம் இருக்கிறது—நரம்பு இருக்கிறது — என்மூச்சே கலந்திருக்கிறது. அதை நான் இப்ப தத்தம் செய்ய விரும்புறேம்பா!"

"தத்தமா? யாருக்கு?"

"எனக்குப்பின், அவைகளை ஆள ஒரு வாரிசு தேவை. என்பெயரைச் சொல்ல, யாராவது வேண்டும். என் அந்தியகாலத்தில் அன்போடு, பேச, எனக்கும் ஒரு துணை இருக்கிறது என்ற திருப்தி ஏற்பட, ஒரு வாரிசு வேண்டும்!"

இந்த இடத்தில், திருவுடையாரின் குரல், கரகரத்தது. கண்ணாடியை எடுத்து, பட்டுச்சால்வையின் முந்தானையால் துடைத்துக்கொண்டார்.

"வாரிசு வேண்டுமா! வாரிசு!" என்று வாய்க்குள் முணு முணுத்தாள் அஞ்சலை.

"அப்பா! நான் தோட்டத்துக்குப்போகிறேன்" என்று எழும்பினாள், குமுதம். அவளால்,நமசிவாயனாரின் வார்த்தைகளையும், கதைகளையும் கேட்கப் பொறுக்கவில்லை.

"ரோஜா, தோட்டத்துக்கா?" முத்துகேட்டார்.

"ஆமாம்பா! ரோஜா பூக்க ஆரம்பித்துவிட்டது. பூ, பெரிசு பெரிசா இருக்கப்பா, நீங்க, இதுபோல பார்த்திருக்கவே முடியாது!"

குமுதா ஆர்வத்தோடு சொன்னாள். அதைக்கேட்ட நமசிவாயம்

தயாராகின்றன!

சிந்தனைச்சிற்பி

சி. பி. சிற்றரசு

எழுதியவை.

1. சாய்ந்தகோபுரம் 1—0—0
(மாஜினி)
2. மதி (நாடகம்) 1—0—0

தமிழ் மன்றம்,
தபால்பெட்டி எண் 316,
தெப்பக்குளம், திருச்சி.

ஆவலோடு கேட்டார், 'அதைப் போல பார்த்திருக்கமுடியாதா?''

"ஆமாம்!"

"நல்ல சந்தர்ப்பம், முத்து, கொஞ்சம் பணம் செலவிடனும் பிரமாதப் படுத்தனும். முத்து, அதிர்ஷ்டம் உன்னை அணைக்கிறதப்பா!"

"ரோஜாத் தோட்டத்துக்கும் அதிர்ஷடத்துக்கும் என்னப்பா சம்பந்தம்?"

நமசிவாயம், கொஞ்சம் சிரித்தார். "இதுதான், பிசினெஸ்! இரண்டு ஏகர் இருக்குமா உன்தோட்டம். அதை இருபதுஆயிரம் விலைபோகச் செய்யலாம்பா!"

முத்து திகைத்தார். இரண்டு ஏகர், இரண்டாயிரத்துக்கோ மூவாயிரத்துக்கோ வாங்கியது. இருபதினாயிரத்துக்கு விற்குமாமே! தினசரி ரோஜாவை விற்றால்கூட ஐந்தோ, பத்தோ கிடைக்கும். ஆனா, ஒரேயடியா, இருபதினாயிரம் கிடைக்குமென்றால் பெரிய அதிசயம்தானே? ஆனால் அதைவிட அதிசயமாயிருந்தது, நமசிவாயம் தந்த விளக்கம்.

"முத்து நான் ஒண்ணு கேட்கிறேன்; மறுக்காதே! நீயும் நானும் அண்ணனும் தம்பியும்போல பழகியிருக்கோம். இலட்சம் இலட்சமா என்னிடம் கிடக்கு. அதை எனக்குப்பின் கவனிக்க யாரும் இல்லே. நீமட்டும் கொஞ்சம் சம்மதிச்சிடு. நம்ப குமுதம், எனக்கு வாரிசு ஆகட்டும். பம்பாயிலே நானே படிக்கவைக்கிறேன். எல்லாம்செய்யறேன். அதே நேரத்தில், உன் ரோஜாத் தோட்டத்தையும் இருபதுஆயிரத்துக்கு விலை போகச் செய்கிறேன்."

குமுதாவைத் 'தத்து' தருவதற்கும், தோட்டம் விலை போவதற்கும் என்ன சம்பந்தமென்று விளங்கவில்லை, அஞ்சலைக்கும் முத்துவுக்கும்.

"குமுதா விஷயம் இருக்கட்டும். அதெப்படி தோட்டத்தை அவ்வளவு விலைக்கு விற்பே!"

"இதுதான் பிசினெஸ்" என்று ஆரம்பித்தார், நமசிவாயம். இருபதினாயிரத்துக்கு எந்தவிதச் சிரமமுமில்லாமெ போகச் செய்யலாம். தோட்ட முழுமையும் பூ குலுங்குகிறது. பார்க்க, அழகா இருக்குல்லே. அதை நாம்ப பார்த்தாமட்டும் போதுமா? இங்கே இருக்கிற இரண்டு மூன்று பத்திரிகை நிருபர்களைக் கூப்பிடனும். கொஞ்சம் தாஜா செய்யனும். அவர்களை அழைச்சுவந்து, தோட்டத்தைக் காட்டனும். அவர்களை நிற்க வைத்து போட்டோ, நல்லதா எடுக்கனும். அதை பத்திரிகைகளிலே வருமாறு செய்யனும்.

ரோஜா உற்பத்தியில் புதுவிதம்!

மண் வளம்தான் காரணமா?

ஒருவரின் அபரிமித வெற்றி.

இப்படியெல்லாம், கொட்டை கொட்டை எழுத்திலே, எழுதச் செய்யனும்.

அதோட, இருந்துடக்கூடாது. இரண்டொரு நாட்களுக்கெல்லாம், இன்னொரு சேதி வருமாறு செய்யனும்.

பம்பாய் கம்பெனியின் முயற்சி

நல்லூர் ரோஜா ஏற்றுமதி

அப்படீன்னு, செய்தி வரனும். பாரேன், எத்தனைபேர் உன் தோட்டத்தைச் சுற்றி நிக்கிறாங்கன்னு! கொஞ்ச நஞ்சம் பணம் வச்சிருக்கவங்க வரமாட்டான்க. அதனாலே நமக்கு லாபம்தான்! பெரிய பெரிய வியாபாரில்லாம், வட்டமிடுவான்.

"ரோஜா, நல்லா விற்குதுங்களா? அப்படீன்னு, கேட்கிறான். நீஎன்ன சொல்லனும்! கொஞ்சம், கேட்கிற ஆளை ஏறெடுத்துப் பார்க்கனும். அலட்சியமாச் சிரிக்கனும்! "பம்பாய் விலை 4 அணா. இங்கே, 2அணாவுக்கு அனுப்பறேன்" அப்படின்னு சொல்லனும். பிறகு பாரேன்போட்டியை! நீ எவ்வளவுக்கெவ்வளவு விலையை உயர்த்திச் சொல்றியோ, அவ்வளவுக்கவ்வளவு ரோஜாவின் தரம் உயர்ந்ததா அர்த்தம்! விலை ஜாஸ்தியாயிருக்கிறதே, வாங்கிறது தான் இப்போ 'பாஷன்' தெரிஞ்சுதா?"

முத்து, சிரித்தார். நல்ல வேடிக்கை!' என்று கூறிவிட்டு எழுப்பினாள் அஞ்சலை. நமசிவாயம், வெற்றிலைப்பெட்டியைத் திறந்து, லிங்கத்தைப்பார்த்தார்.

"சரிதான்! அப்படியானால், நிறையப்பணம் கிடைக்கும்" — என்று கேட்டாள், குமுதம்.

'ஆமாம்! தரித்திரம் ஓடிவிடும். உன்னைத் தங்கநகைகளால் அலங்கரிக்கலாம். அப்படி இப்படி ஆலாய் பறக்க வேண்டியதில்லை"

"இஷ்டம்போல் வாழலாம்!"

"ஓ! கஷ்டம் நீடிக்காது."

"பணம் கிடைக்கும். ஆனால் ரோஜாத்-தோட்டம்?"

"இதென்னம்மா! பணம்தானே பிரதானம்!"

"தோட்டம் போனால் என்னவா? சரிதான், அதை உருவாக்கி பயிரிட்ட அருமைதெரியுமா தங்களுக்கு......"

"பணம்,கஷ்டப்படாமலாவரும்"

"ஒன்றும், அப்படி வரவேண்டாம். இப்பொழுது, வருவதே போதும். நிறையவும் தேவையில்லை தோட்டத்தையும் விற்கவேண்டியதில்லை!"

குமுதாவின் பதில், தாய்க்கும் தந்தைக்கும் சந்தோஷத்தைத் தந்தது, அவர்கள் முகமலர்ச்சியால் தெரிந்தது. நமசிவாயம், ஒன்றும் புரியாமல் விழித்தார்!

"வர்ற சிதேவியை உதைக்கிறீர்களே......" என்று சொல்லிவிட்டு, குமுதாவைப் பார்த்தார்.

"வியர்வை சிந்திய தோட்டம் என்றும் இருக்கும், அது தரும் பணம்...?"

"தோட்டம் கிடக்கட்டும்.

(8-ம் பக்கம் பார்க்க)

எங்களிடம் இயக்க நூல்களும்
மற்ற எல்லா அறிஞர்கள்
நூல்களும் கிடைக்கும்.
செல்வம் புத்தக நிலையம்,
319, காந்தி ரோட்,
ஆடிசன்பேட்டை
காஞ்சிபுரம்.

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

ஓவியக்காட்சி

பகுத்தறிவு இயக்க சரித்திரத்தில் புதியதொரு புரட்சி அத்தியாயமாகத் திகழப் போகிறது, ஓவியக் கண்காட்சி! ஓவியத்தால், உதவாத கருத்துகளை பரப்பி வந்தனர் இதுவரை! இந்தக் கலை, புதுமைக் கருத்துகளைப் புகுத்தவும் பயன்படும் என்பதை நிரூபிக்கப் போகிறது, ஓவியக் கண்காட்சி.

நாடகங்கள்

மாநாட்டில், நடிப்புப்புலவர் கே. ஆர். ஆர். குழுவினர் நடிக்கும் புதிய நாடகங்கள், மாதவரம் ஆந்திர நண்பர்கள் நடத்தும் தெலுங்கு நாடகம், தி. பெ. மு. கழகத்தினர் நடத்தும் நாடகம், ஆகிய நாடகங்கள் கலை நிகழ்ச்சியில் தலைமை வகிக்கப் போகின்றன.

இசை விருந்து

தமிழிசை வல்லுநர் **சிதம்பரம் சி. எஸ். ஜெயராமன்**

இசை முரசு **நாகூர் அனிபா**

இசைச் செல்வி **கஸ்தூரிபாய்**

இன்னும் பலரும், இசைவிருந்தளிக்க இருக்கிறார்கள்

மாநில மாநாட்டில், உள்ளத்துக்கும், கருத்திற்கும் உவகை சேர்க்கும் கலை நிகழ்ச்சிகள் பல இடம்பெறுகின்றன.

விளம்பரக் குழு.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.